RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1515

OPEN ACCESS

# திருப்பேரூர்ப் பட்டீசர் கண்ணாடி விடுதூது காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

ஆ. மகாலட்சுமி [அ], ந. தமிழரசி [அ, *]

[அ] தமிழ்த்துறை, நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி-642001, தமிழ்நாடு, இந்தியா

# Thirupperur Patteesar Kannadividu thoodhu shows the ethics of life

A. Mahalakshmi [a], N. Tamilarasi [a, *]

[a] Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642001, Tamil Nadu, India

* Corresponding Author: tamilgokult@gmail.com

Received: 30-06-2022
Revised: 30-09-2022
Accepted: 13-10-2022
Published: 09-12-2022

Check for updates

**ABSTRACT**

Tamil is a language that has enriched itself by giving room to new literary genres and forms. Literature is the record of time. They also serve as historical evidence to reveal the time of their creation. Tholkappiyam, the first book in Tamil, contains small literary elements. After that, the development of small literature reached a high level in Sangam literature and especially in the period of devotional literature hero in time Trivia appeared in abundance. Those created with deities, rich people and people as their leaders, reduced in size and filled with imagination, were called small literatures. Dudu literature, one of the minor literatures, is unique. A messenger sent by a leader to a leader was called Akathdudu, and a messenger sent by a king to an enemy was called Kurutdudu. There is a custom of sprinkling perfumes in small letters. In this way Mahavithuvan Kuttiyappa sends the counter mirror on Lord Thiruperur. About the life of such a mirror This article is meant to explain.

**Keywords:** Thoothu, Akathoothu, Purathoothu, Aadi, Aththam, Daruppanam

## முன்னுரை

நாயக்கர் காலமான சிற்றிலக்கிய காலத்தில் எழுந்த இலக்கிய வகைகள் சிறப்பு வாய்ந்தவை. காப்பிய காலம் வரை சிறு கூறாக இருந்த தூது பிற்காலத்தில் தனி இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றது. தூது இலக்கியங்களில் தூதுப் பொருள்களுக்கு தலைமைப் பண்பு கொடுக்கப்படுவது உண்டு. தூதாக அனுப்பப்படும் பொருள்கள் தலைவன் தலைவிக்கு இணையான பங்களிப்பை இலக்கியங்களில் நல்குவதும் உண்டு. தூது செல்லும் நோக்கம் மட்டுமன்றி, அவ்விலக்கியங்களின் வாயிலாக புலவனின் கவிமனம் வெளிப்படுகிறது. அவ்வகையில் தூது நூல்களில் ஒன்றான கண்ணாடி விடுதூது என்ற நூலில் இடம்பெற்றுள்ள இன்றியமையாத வாழ்வியல் செய்திகளை கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## தூது இலக்கியம்

ஒருவருடைய கருத்தை மற்றவருக்கு தெரிவிக்க பிறிதொருவரை அனுப்புவது தூது ஆகும்.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே"

என்று தூதினை பண்டைய இலக்கணமான தொல்காப்பியம் பிரிவின் வகைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது (Subramaniyan, 2010). அவ்வாறு ஊடலின் காரணமாக பிரிந்து இருப்போரை சந்து செய்து சேர்ப்போரை தொல்காப்பியனார் வாயில்கள் என்று குறிப்பிடுகிறார்.

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்

யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப" (Subramaniyan, 2010)

இத்தகைய சிறப்பு வாய்ந்த தூதினை மேற்கொள்ள உயர்திணைப் பொருள்களையும் அஃறிணைப் பொருள்களையும் பயன்படுத்தினர் என்பதை

"உயர்திணைப் பொருளையும் அஃறிணைப்பொருளையும்

சந்தியின் விடுத்தல் முந்தறுதூது"

என இலக்கண விளக்க நூற்பா விளக்குகிறது (Subramaniyan, 2010). மேலும் தூது செல்லும் அஃறிணை பொருள்களாக கீழ்க்காணும் பத்தினை பிரபந்தத்திரட்டு நூற்பா குறிப்பிடுகிறது.

"எகினமயில் கிள்ளை எழிலி யொடு பூவை

சகிகுயினெஞ் சந்தென்றல் வண்டு - தொகை பத்தை"

இவை மட்டுமின்றி இன்று புகையிலை, மயில், தந்தி, செருப்பு, காக்கை, முகில், பணம் போன்ற பல வகையான பொருள்களைத் தூது செல்லும் பொருளாகக் கொண்டு பல தூது இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இதில் வசைத்தூது நூல்களும் உள்ளன. ஆனால் அவை அத்தகு சிறப்பு பெறவில்லை. சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் தூதுக் கூறுகள் நிறைந்திருக்கின்றன. அதைத்தொடர்ந்து பக்தி இலக்கியம், காப்பியம் ஆகியவற்றிலும் சிறு சிறு கூறாக இடம்பெற்ற தூது 14ஆம் நூற்றாண்டில் தான் முழுமையான இலக்கிய வடிவம் பெற்றுள்ளது.

"உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடுதூது என்னும் நூலே தூது இலக்கிய வகையில் முதல் நூல் ஆகும். அதைத்தொடர்ந்து தூது இலக்கிய நூல்கள் தோன்றுவதில் சிறிதுகாலம் தொய்வு ஏற்பட்டது. 17 ம், 18 ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சிற்றிலக்கியங்களின் வளர்ச்சி நிலையால் தூது இலக்கிய நூல்களும் வெகுவாக தோற்றம் பெற்றன". என்கிறார் மு. பொன்னுசாமி அவர்கள் (Ponnusamy, 2016).

## கண்ணாடி விடு தூது

கொங்கு நாட்டின் புகழ்மிக்க ஊரான கோவைக்கு அருகிலுள்ள ஓராட்டுக்குப்பை செட்டிபாளையம் என்ற ஊரில் 275 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெருநிலக் கிழார் செல்லீ கவுண்டர் ஆவார். இராமாண கவுண்டரின் இரண்டாவது மகனே குட்டியப்பக் கவுண்டர் ஆவார். கல்வி பயின்று வந்த காலத்தில் அம்மை நோய் தாக்கியதால் தனது பதினைந்தாவது வயதிலேயே கண்பார்வையை இழந்தார். தமிழ், சோதிடம், கணிதத்தில் சிறந்தவர். சைவ சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மருதமலை முருகனே குருக்கள் வடிவில் வந்து இவருக்கு உணவு கொடுத்ததை அறிந்து மெய்சிலிர்த்த குட்டியப்பக்கவுண்டர் அப்பெருமான் மீது மருதாசலமூர்த்தி சதகம், மருதீசர்பதிகம், ஊசல், தாய்-மகளேசல், சந்தக்கொச்சகம் முதலிய இலக்கியங்களை பாடினார். திருப்பேரூரில் சிவஞான உபதேசம் பெற்று, தனது பார்வை இழந்ததற்கான முற்பிறப்பு காரணத்தை அறிந்தார். பின்பு பேரூர் இறைவன்மீது திருப்பேரூர்ப் பட்டீசர் கண்ணாடி விடுதூது, மரகதாம்பிகை சதகம், பச்சைநாயகி அம்மை பதிகம், பச்சை நாயகி அம்மை வருகை பூசல் தெம்மாங்கு, அரசம்பல விருத்தம் முதலிய நூல்களைப் பாடினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த திருப்பேரூர் பட்டீசர் கண்ணாடி விடு தூது என்ற நூலானது குறிப்பிடத்தக்கது. இந்நூல் பங்குனி உத்திரத் திருநாளன்று உலாவந்த பட்டீசப் பெருமான் மீது காதல் கொண்ட தலைவி ஒருத்தி அவன் அருள்வேண்டி கண்ணாடியை தூது விடுவதாக பாடப் பெற்றுள்ளது.

## கண்ணாடியின் சிறப்பு

ஆடி, அத்தம், தருப்பணம், ஒளிவட்டம், படிமக்கலம், முகுரம் முதலிய பெயர்களைப் பெற்ற கண்ணாடியானது, மனித வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தும் இன்றியமையாத பொருளாகும். தொல்காப்பியர், கண்ணாடி பற்றிக் குறிப்பிடுகையில்,

"ஆடி நிழலின்அறியத்தோன்றி" (Subramaniyan, 2010)

கண்ணாடியானது தனக்குள் பிரதிபலிக்கும் பொருளின் உருவத்தை தெளிவாகக் காட்டும் என்கிறார். மனிதனின் ஒரு நாளின் பல மணி நேரத்தை கண்ணாடி எடுத்துக் கொள்கிறது என்பதை மான் போன்ற பெண்கள் நாளெல்லாம் கண்ணாடி முன் நிற்க நாட்டில் உள்ளோர் எல்லாம் கூடி வந்தாலும் அவர்களை அசையவிடாமல் செய்யும் என்ற நிலையைப் பற்றி

"மானேயார் 'நாட்டங்க நாற்றிசையு நாடிலுமுன் னேயசைய

மாட்டாமற் செய்த படி மக்கலமே"

என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார் (Kuttiappa Gounder, 2012). கண்ணாடி உருவத்தைக் காட்டும். ஆனால் உருவத்தில் ஒட்டியுள்ள அழகையோ, அழுக்கையோ தன்மேல் ஒட்ட விடாது. அதுபோல் மனித வாழ்வும் அமைய வேண்டும் என்பதை

"உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை

இப்போதே எம்மை நீராட்டலோர் எம்பாவாய்"

என்று நாச்சியார் தனது திருப்பாவையில் குறிப்பால் உணர்த்துகிறார். மனித வாழ்க்கை மட்டுமின்றி இறைவழிபாட்டிலும் கண்ணாடி சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை ஆசிரியர்,

"நீட்டுபதி 'னாறுபசா ரஞ்சசிவனுக் கன்பினொடு செய்யவதில்

மாறிலா தேந்துமொளி வட்டமே" (Kuttiappa Gounder, 2012)

என்று சிவபரம்பொருளுக்கு நடைபெறும் பதினாறு உபசார வழிபாட்டில் கண்ணாடியானது தவறாது காட்டப்படும் என்கிறார். இந்நூல் ஆசிரியரான மகாவித்துவான் குட்டியப்ப கவுண்டர் கண்பார்வை இல்லாதவர். அவர் கண்ணாடியை தன் கண்ணுக்கு இணையான கண்மணியாக குறிப்பிடுகிறார்.

"நண்ணுபொறி யைந்தினையு நாடவறி யாதவென்றன்

கண்ணிணைக்குங் கண்மணியாய்க் காட்டிடுவாய் -விண்ணு மண்ணு

மெட்டுத் திசையோ டிருந்தவொரு பத்தினையுங்

கட்டுத் தவிர்த்திடுவாய் காணாதே" (Kuttiappa Gounder, 2012)

விண்ணிலும் மண்ணிலும் எட்டு திசைகளிலும் மேலும் கீழும் உள்ளவற்றை அறியாதபடி உள்ள எனது கண்ணின் கட்டை நீக்கிடுவாய் என்று பட்டிப் பெருமானிடம் ஆசிரியர் வேண்டுவதாக இவ்விரு கண்ணிகளும் அமைந்துள்ளன.

வில்லிபுத்தூரார் வில்லிபாரதத்தில் கண்பார்வையற்ற திருதராஷ்டிரனை முகுரவானனன் என்று குறிப்பிடுகிறார். (ஆதிபருவம் சம்பவச்சருக்கம் பாடல் 115) முகுரம் என்றால் கண்ணாடி. ஆனனம் என்றால் முகம். கண்ணாடி போன்ற முகத்தை உடையவன். கண்ணாடி எப்படி தான் பிறரால் காணப்பட்டு பிறரை தான் காணும் உணர்ச்சியற்று இருக்கிறதோ அதுபோல திருதராஷ்டிரனை அனைவரும் பார்க்க முடிந்தாலும் அவனால் பிறரை பார்க்க முடியாமல் பார்வையற்றவனாக இருக்கிறான் என்பதை இப்பெயர் விளக்கிக் கூறுகிறது. இவ்வாறு கண்ணாடி ஆனது பார்ப்போரை மகிழ்வித்து எவ்வித உணர்வுகளையும் தனக்குள் கொண்டு செல்லாத அரிய பொருளாக உள்ளது என்பதை அறிய முடிகிறது.

கண்ணாடியே மிகப் பெரிய செல்வமாகும். அதன் அருமை உணராது அது நிலையற்றது என்று கூறுவது தகாது என்பதை,

"இரசமுடன் சேர்ந்திருப்ப தென்றறியா ருன்னை

நிரசமென்று சொல்லுவது நேரோ" (Kuttiappa Gounder, 2012)

என்று கூறி பிற செல்வங்கள் நிலையற்றவை என்று குறிப்பிடுகிறார். கண்ணாடி நிலையானது அதில் தோன்றும் பிம்பங்களே நிலையற்றவை என்பதை

"எழுந்து ஓங்கி விண்ணோடு மண்

ஒக்க, இலங்கும் ஆடி

உழுந்து ஓடு காலத்திடை" (Kambar, 1928)

கண்ணாடியின் மீது எப்பொருளை இட்டாலும் அது நில்லாமல் ஓடி விடும் என்ற தனது ஆழமான கருத்தை கம்பர் அழகான வரிகளில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக கண்ணாடி ஆனது தொல்காப்பியர் காலம் தொடங்கி இக்காலம் வரை சிறப்பான இடத்தை பெற்றுள்ளது என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது. இலக்கியங்களில் நூலாசிரியர்கள் கண்ணாடியை மங்கலப் பொருள்களாகவும் தனக்கு நிகரில்லாத சிறப்புப் பொருள்களுக்கு உவமை கூறவும் பயன்படுத்தினர் என்பதை நம்மால் அறிய முடிகிறது.

## கண்ணாடியின் பெருமை

கடல்வழியே கலம் செலுத்துவோருக்கு கலங்கரை விளக்கமாகவும், வேதாந்த ஆகம நூல்களைப் படிப்போருக்கு மூக்கின்மேல் மூக்குக்கண்ணாடியாகவும், வலப்பக்கம் இருக்கும் பூணூலை இடப்பக்கம் காட்டுவதாகவும் கண்ணாடி விளங்குகின்றது. உலகைக் காக்கும் அரசரும் உன் முன் பற்களைக் காட்டி கெஞ்சுவான் என்பதை ஆசிரியர்

"கடல்சூ 'ழும் புவியைத் தாங்கு மரசருமே- தம்பல்லைக்

கெஞ்சிப் பணிந்திட்டுன் கீழ்ப்பட்டார்" (Kuttiappa Gounder, 2012)

என்று குறிப்பிடுகிறார். இராஜராஜ சோழன் குளித்த பின் நெற்றியில் திருநீறு பூசிக் கொண்டு தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்து அழகு செய்துகொண்டான் என்பதை,

"பவளச் சடையோன் பணித்தபடியே தவளகிரி புண்டரஞ் சார்த்திக்

குவளைப்பங் கார்க்கோலம் ஆடியிற் காண்பான்"

என்று) குறிப்பிடுகிறது. அரசன் மட்டுமின்றி இறைவன் திருவீதி உலா செல்வதற்கு முன்னர் அலங்காரம் செய்து விட்டு இறுதியில் கண்ணாடியை பார்த்து செல்லும் வழக்கம் இன்றும் வைணவக் கோயில்களில் உள்ளது. இதை 'கண்ணாடி சேவை' என்று குறிப்பிடுகின்றனர். இந்நிகழ்வு ஸ்ரீரங்கத்தில் இன்றும் நடைபெறுகிறது.

## நான்முகனும் - கண்ணாடியும்

கஞ்சன் என்ற பெயருடைய நான்முகன் நான்மறை ஓதும் வாய்களை உடையவன். கஞ்சனம் என்ற பெயருடைய கண்ணாடிக்கு நான்கு பக்கங்களிலும் சட்டங்கள் பொருந்தி உள்ளதாக கண்ணாடிக்கும் நான்முகனுக்கும் ஒப்புமை கூறியுள்ளார்

"கஞ்சனம்பேர் காட்டுகையாற் காதலித்தோர்க் கானதினாற்" (Kuttiappa Gounder, 2012)

## திருமாலும் - கண்ணாடியும்

யசோதைக்கு கண்ணன் தன் வாயினுள்ளே எல்லா உலகங்களையும் காட்டியது போல், கண்ணாடியானது தனக்கு எதிரில் உள்ளவற்றை காட்டுவதாலும், விண்ணையும் மண்ணையும் உள்ளே அடக்கி நிற்கும் ஆற்றல் பெற்றிருப்பதாலும், திருமாலை ஒத்தது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"மேதினியு மெல்லாந்தன் மெய்யி லடக்குகையால்

ஆதிநா ராயணநீ யாமெனலாங்" (Kuttiappa Gounder, 2012)

## சிவபெருமானும் -கண்ணாடியும்

கண்ணாடியானது குற்றமற்ற மகளிரது அருகிலேயே இருந்து அவர்கள்சோர்வை நீக்குகிறது.

"பாகத் திருத்தலாற் பன்னீருந் தங்கினதாற்

சோகத்தை யார்க்குந் துடைத்தலால" (Kuttiappa Gounder, 2012)

மகளிர் மூன்றாக பாகுபடுத்திய தம் கூந்தலை சடையாக பின்னிக் கொள்வதற்கு உதவுவதாலும், பழமையான இவ்வுலகில் ஆடி என்று பெயர் பெற்றமையாலும் திருப்பேரூர் இறைவனாகிய சிவபெருமானுக்கு நிகராகி சிறப்புப் பெற்றாய் என்பதை

"முந்தவரு 'மம்பலத்தி லாடியென்று மானதினாற் பேரைநகர்

நம்பனுக்கு நேரான நாயகமே" (Kuttiappa Gounder, 2012)

என்று குறிப்பிடுகிறார். மும்மூர்த்திகளுக்கும் இணையான இடத்தை கண்ணாடி பெற்றுள்ளது சிறப்பு வாய்ந்த பகுதியாக இந்நூலில் அமைந்துள்ளது.

## கண்ணாடியின் செயல்கள்

கீழோர் ஆயினும் மேலோராயினும் அவர் தம் உருவத்தை உள்ளவாறு காட்டும் பொதுமகள் போல் அனைவருக்கும் பொதுவானவள். ஒப்புமை கூற இயலாத பெருவாழ்வு. மகளிரின் அழகை ஊடல் கொள்ளும் நேரத்தில் மேலும் அழகாக காட்டி அவர்கள் ஊடல் போக்குவாய் என்பதை,

"சேருவாய் கீழ்மேல் சிறப்பிலதாய்ப் - பாரிற்

கணிகைமா தென்றுன்னைக் காணலாங் கண்ணே

யிணைபகரா வாழ்வே யினிதே" (Kuttiappa Gounder, 2012)

என்கிறார் ஆசிரியர். குறுந்தொகையில் தலைவனை பரத்தை ஆடிப்பாவை என்று குறிப்பிடுகிறாள். தம்முடைய வீட்டில் முன் நின்றார் தன் கையையும் காலையும் தூக்க தானும் தூக்குகின்ற கண்ணாடியுள் தோன்றுகின்ற பாவையைப் போல தலைவன் உள்ளான் என்று பரத்தை கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"கையும் காலும் தூக்கத் தூக்கும்

ஆடிப் பாவை போல" (Nagarajan, 2004)

மகளிர் ஊடல் கொள்ளும்போது ஊடல் நீக்கும் வாயிலாக கண்ணாடி அமைகிறது. பெண்களின் இயல்புகளையும் விருப்பங்களையும் பெருமைகளையும் அறியும் திறன் கொண்டது கண்ணாடி என்பதை,

"பெண்ணவர்க டங்குணமும் பெட்பும் பெருமையுநீ

யுண்ணயந்து கண்டிருப்பா யுத்தமனே" (Kuttiappa Gounder, 2012)

என்று கூறி கண்ணாடியின் செயல்களை எடுத்துரைக்கிறார். நம் முகத்தில் ஏதேனும் அழுக்கோ, கறையோ இருந்தால் அதைக் கண்ணாடி கூட்டியோ குறைத்தோ காட்டுவது இல்லை. உள்ளதை உள்ளவாறு காட்டுகிறது. கண்ணாடிக்கு முன்னால் நாம் நிற்கும் போது மட்டுமே நம் குறை தெரிகிறது. நாம் அகன்று விட்டால் கண்ணாடி மௌனம் ஆகிவிடுகிறது. பிறரிடம் நாம் பேசும்போது கண்ணாடியை பின்பற்ற வேண்டும். என்பதை கண்ணாடி நமக்கு தெளிவாக விளக்குகிறது.

## கண்ணாடியுடனான நட்பு

மனித வாழ்வில் நட்பு என்ற உறவு இன்றியமையாதது இலக்கியங்கள் வகைப்படுத்தியிருக்கும் உறவுகளில் நட்பு சிறப்பிடம் பெறுகிறது. தாய்-பிள்ளை கணவன்-மனைவி என்ற உறவுகளுக்கு ஈடாக போற்றப்படுகின்ற உயர்ந்த உறவு நட்பாகும். நவில்தொறும் நூல்நயம் போலும் (குறள் -783), புணர்ச்சி பழகுதல் வேண்டா (குறள் -785), கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் (குறள்-701) ஐயப் படாஅ தகத்த துணர்வானை (குறள்-702) என்று திருவள்ளுவர் நட்பிற்கு இலக்கணமாக கூறிய குறள்களை கண்ணாடியுடன் உண்டான நட்பிற்கு இணையாக இந்நூலாசிரியர் பயன்படுத்தி உள்ளார். கன்னிப்பெண்களது மனத்தில் இருக்கும் கருத்தை அவர்கள் வெளிப்படுத்தும் முன்பே கண்ணாடியானது சிந்தையால் உணர்ந்துகொள்ளும் (Puliyur Kesigan, 2009).

“கன்னியர்கள் ‘அந்தக் கரண மவருரைக்கு முன்னே நீ

சிந்தை தனிலுணர்ந்து தேர்ந்திடுவாய்” (Kuttiappa Gounder, 2012)

என்று கன்னிப் பெண்களுக்கும் கண்ணாடிக்கும் உள்ள நட்பைக் கூறுகிறார்.

“சித்திரையுங் கன்னியிடஞ் செம்பாதி நட்பிசையும்

நித்தியமா யிந்நாள் நிறைந்திருக்குந்” (Kuttiappa Gounder, 2012)

உத்திரமும் சித்திரையும் தன்னிடம் பாதி நட்பே கொள்ளும் எப்போதும் நிறைவான நட்பு பூண்டு இருப்பது அத்தமாகிய கண்ணாடியே என்று கண்ணாடி உடனான தனது நட்பினைக் கூறுகிறார். முழுநிலவின் ஒளிபொருந்திய பங்குனி உத்திரநாளின் அடுத்தநாள் அத்தம் எனும் நாளாகும். அத்தம் என்றால் கண்ணாடி என்று பொருள்படும். ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் நான்கு பாதங்கள் உண்டு. அந்த வகையில் அத்த நட்சத்திரம் மட்டுமே முழுமையாக கன்னிராசிக்கு உரியதாக இருக்கிறது. இங்கு கன்னிராசியை கன்னிப்பெண்களுடனும் அத்த நட்சத்திரத்தை கண்ணாடியுடனும் ஒப்பிட்டு கூறுவது நனி சிறந்த பகுதியாக உள்ளது.

## கண்ணாடியை தூது அனுப்ப காரணம்

கன்னிப் பெண்களை பட்டீசரிடம் தூது அனுப்பினால் அவர்களது துன்பத்தை சொல்லி தீர்த்துக் கொள்வார்களே அன்றி தலைவியின் வருத்தம் கூறார். பறவைகளை தூது அனுப்பினால் அவர் எதிர்நின்று சொன்னதையே சொல்லும். ஏதேனும் இரையைக் கண்டால் ஓடி விடும்.

“பைங்கிளியும் ‘மன்னனும்வண் டுங்குயிலு மன்றிலுந்தா ராவுமயிலு

மின்ன பிறவு மெதிர்நின்று - சொன்னதையே

சொல்லும் பிரிதுரைத்துச் சொல்லும்” (Kuttiappa Gounder, 2012)

கண்ணாடியானது தனக்கென எவ்வித உணர்வும், பிரதிபலிப்பும் இல்லாதது. பிறர் காட்டும் பொருள்களை காட்டியவாறே பிரதிபலிக்கும். பிற பொருள்களை தூது அனுப்பினால் தலைவியின் மனவருத்தத்தை பட்டீசப் பெருமானிடம் தெளிவாகக் கூறமாட்டார்கள் அத்தம் மட்டுமே உள்ளதை உள்ளவாறு கூறும் என்பதால் கண்ணாடியைத் தூதாக அனுப்புகிறார்.

## சிறந்த தூதன்

கற்பன எல்லாம் கற்று, பகை அரசனுக்கு அஞ்சாமல், கேட்பவர் உள்ளத்தில் பதியுமாறு சொல்லி காலத்துக்கு பொருத்தமானதை அறிகின்றவனே தூதன். தன் கடமை இன்னதென்று அறிந்து அதை செய்வதற்கு உற்ற காலத்தை நோக்கி, தக்க இடத்தையும் ஆராய்ந்து சொல்பவனே தூதன் என்ற வள்ளுவர் வாக்கை இந்நூலாசிரியரும் வழிமொழிகிறார்.

"வெல்வாய் மருமாலை மேலவன்றான் றந்திடவே

சொல்வாய் கண்ணாடியே தூது" (Kuttiappa Gounder, 2012)

எங்கள் நாயகனான பட்டீசன் முன் சென்று நின்று எனது பக்கத்தை அவர் உணருமாறு எடுத்துக்கூற வேண்டும். அவ்வாறு செய்தால் அரசம்பலத்தை தனக்குரிய இருப்பிடமாகக் கொண்டு வாழ்கின்ற மேலான அப்பெருமான் காலையில் கிழக்கே உதிக்கும் கதிரவனை சந்திரனை போல மேற்கே உதிக்குமாறு செய்த சித்து விளையாடல் போலவே, நீயும் செய்தாய் என்று பெரிதும் இன்புறுவேன். அதனால் அவனிடம் சென்று அவன் அணிந்துள்ள நறுமணமிக்க கொன்றை மலர் மாலையை எனக்கு அளிக்கும்படி தூது சொல்லி வென்று வருவாயாக. என்று கூறி ஆசிரியர் தன் தூதை முடிக்கிறார். கண்ணாடியானது எந்தக் காலத்திற்கும் பொருத்தமான தூதுப் பொருளாகும் என்பதை அறியலாம்.

## முடிவுரை

தூது இலக்கியங்களில் பலவகையான பொருள்களை தூது விடுதல் வழக்கம். அவ்வகையில் கண்ணாடியை தூது அனுப்புவது இந்நூல் மட்டுமே. மேலும் தூதுவிடும் பொருளை சிறப்பித்துக் கூறியும் மற்ற பொருள்களை அனுப்பாததற்கான காரணங்களையும் எடுத்துரைக்கும் பகுதி சிறப்பானதாக அமைகின்றது. அரசரும், ஆன்றோரும், சான்றோரும், சாமானியரும் கண்ணாடியின் முன் சமம் என்பதனாலும், தனக்கு நிகர் தானே என்பதாலும் கண்ணாடியானது இலக்கியங்களிலும், மனித வாழ்விலும் சிறப்பிடம் பெறுகிறது. இதன்மூலம் அன்றாடம் நிகழும் அனைத்து வாழ்வியல் செயல்களிலும் கண்ணாடியானது சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது என்பதை நம்மால் அறிய முடிகிறது

## References

Kambar, (1928) Kambaramayanam, Artisan Printing Press, Chennai, India.

Kuttiappa Gounder, (2012) Thirupperur Patteesar Kannadividu thoodhu, Kumaarathevar Pathippagam, Coimbatore, India

Nagarajan, V., (2004) Kurunthogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Ponnusamy, M. (2016) Tamil Sitrilakiya Varalaru, Pari Nilayam, Chennai, India.

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Subramaniyan, S.V. (2010) Tholkappiyam Thelivurai, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License